OS: 302/2018

Date: 03.03.2023.

பெயர் : சரவணன்

**வாதி தரப்பு சாட்சி 2 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை - பிரதிவாதிகள் தரப்பில்**

எனக்கு எழுத படிக்க தெரியும். 1971 பாகப்பிரிவினை பத்திரப்படி A schedule சொத்து ராமசாமிகவுண்டருக்கும், அவரது மனைவிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. ராமசாமிகவுண்டரின் மனைவிக்கும் சொத்து ஒதுக்கப்பட்டதாக பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. ராமசாமிகவுண்டர் உயிருடன் இருக்கும் வரை அந்த சொத்தினை விற்கக்கூடாது என வாசகங்கள் பத்திரத்தில் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. ராமசாமிகவுண்டர் ஆவணங்களில் கையெழுத்து எதிலில் செய்வார் என்றால் ஆங்கிலத்தில் செய்வார்.

தாவா சொத்து கூட்டாக உள்ளதாக சொல்லியுள்ளேன், அதற்கு ஆதரவாக அடங்கல், பட்டா, சிட்டா, கந்தாய ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1971ம் ஆண்டில் செய்யப்பட்ட பாகப்பிரிவினையில் எங்கள் தந்தைக்கு G schedule சொத்துக்களில் விஸ்திரணம் 1 ஏக்கர் 68 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்றால் அது எனக்கு தெரியாது. எனது தந்தைக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களில் தற்போதும் வைத்திருக்கிறோமா என்றால் இல்லை விற்பனை செய்துவிட்டோம். தற்போது மீதி சொத்துக்கள் உள்ளதா என்றால் கொஞ்ச இடம் உள்ளது அது எவ்வளவு என்று எனக்கு தெரியாது. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் லாரி தொழில் செய்து வந்தேன். ஆவண எண்.1866/1974 ஆவண எண்.863/1978 ஆகிய இரண்டு ஆவணங்களும் போலியானவை என்று செல்லத்தக்கது அல்ல என வழக்குரையில் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். அது எதனால் போலியானது என கேட்கிறேன் என்றால் எனது தாத்தா அந்த சொத்தை ராமாயம்மாளுக்கும் கிரயம் செய்து கொடுக்கிறார் மற்றும் சண்முகத்திற்கும் கிரயம் செய்து கொடுக்கிறார். 1974ம் ஆண்டில் ஆள்மாறாட்டம் செய்து 40 செண்ட் நிலத்தை போலி கிரயம் செய்துள்ளார்கள். அதேபோல் 1978ல் சண்முகத்திற்கு 1 ஏக்கர் 18 செண்ட் போலியாக கிரயம் செய்துள்ளார்கள்.

ராமசாமிகவுண்டர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு போயிருந்தாரா என்று எனக்கு தெரியாது. 1974 ல் எனக்கு என்ன வயது என்றால் நான் 1973 ல்தான் பிறந்தேன், 2 வயது. மேற்படி போலி கிரயம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது, எனது தந்தையும், எனது அண்ணனும் சொல்லித்தான் எனக்கு தெரியும். தாவா சொத்திற்கான பட்டாக்கள் பிரதிவாதிகள் பெயரில்தான் உள்ளது என்றால் தவறு, என் தாத்தா பெயரில்தான் உள்ளது. 1971 பாகப்பிரிவினையில் ஏற்பட்ட A schedule சொத்தானது எனது தாத்தா ராமசாமிகவுண்டருக்கு தனிப்பட்ட சொத்து என்பதால்தான் அவர் மேற்படி 1974 ம் ஆண்டிலும், 1978 ம் ஆண்டிலும் இரண்டு கிரயங்கள் ராமாயம்மாளுக்கும், சண்முகத்திற்கும் முறையே செய்துகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, மேற்படி சொத்தினை எனது தாத்தாவை ஏமாற்றித்தான் கிரயம் பெற்றுள்ளார்கள்.

ராமசாமிகவுண்டருக்கும் அவரது சொத்தினை விற்பனை செய்ய முழு அதிகாரம் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. பொய்யான விவரங்களை கொண்டு கற்பனையாக இவ்வழக்குரையை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது தாத்தா பத்திர பதிவு அலுவலகத்திற்கு சென்று முறையாக ஆவணங்களை கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கு எந்த விவரமும் தெரியாமலேயே இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களுக்குரிய சொத்துக்களை விற்பனை செய்துவிட்டதாலும் தற்போது தாவா சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கு போட்டுள்ளோம் என்று சொன்னால் தவறு.

வாதிகளாகிய எங்கள் வழக்கானது நாங்கள் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றும், இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 2012 ல் இதே தாவா சொத்தை வைத்து எனது தந்தை பழனிவேல் அ.வ.28/2011 என்ற வழக்கு மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் போட்டிருந்தார் என்றால் உண்மைதான், எனது தந்தை வழக்கு நடத்தி வந்தார். அந்த வழக்கு என்ன ஆனது என்றால் எனது தந்தை இறந்துவிட்டதால் அது எனக்கு தெரியவில்லை. மேற்படி வழக்கானது 09.12.2012 தேதியில் வாதிகள் தரப்பில் ஆஜரில்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது.

சுமார் 40 ஆண்டுகளுக்கு பின்னிட்டு எனது தாத்தாவால் செய்து கொடுக்கப்பட்ட 1974, 1978ம் ஆண்டுகளில் உள்ள கிரய ஆவணங்களை செல்லத்தக்கது அல்ல என தற்போது நாங்கள் கேட்க முடியாது என்றும், மேற்படி காலவரையறை கடந்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒப்பம்/PW2
ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்.